# TNPSC Current Affairs 1st September 2016

தினமணி

1. **சென்னை உயர் நீதிமன்றத்தில் புதிய நீதிபதியாக என்.ஆதிநாதன் நியமனம்** செய்யப்பட்டுள்ளார்.

2. **குழந்தைகள் இறப்பு விகிதத்தை குறைப்பதில் தமிழ்நாடு சாதனை. இறப்பு விகிதம் குறைவாக உள்ள பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது** என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார். 2010**ல்** 1,000 **உயிருள்ள குழந்தை பிறப்புகளுக்கு** 24 **ஆக இருந்த குழந்தை இறப்பு விகிதம் தற்போது** 20 **ஆக குறைந்துள்ளது**.

3. **தமிழக ஆளுநராக சென்னமனேனி வித்யாசாகர் ராவை நியமித்து குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி உத்தரவிட்டுள்ளார்.** தமிழக ஆளுநராக இருந்த கே.ரோசய்யாவின் பதவிக் காலம், கடந்த ஆகஸ்டு 30 ல் நிறைவடைந்த நிலையில், **மகாராஷ்டிர ஆளுநராகப் பொறுப்பு வகிக்கும் வித்யாசாகர் ராவுக்கு இந்தப் பொறுப்பு கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது**.

4. **சென்னை தரமணியில் உள்ள டைசல் பயோபார்க் நிறுவனத்தில் உயிரி தொழில்நுட்ப அபிவிருத்தி மையம்** 20 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

5. **நேஷனல் ஹெரால்டு** (**ஆங்கிலம்**), **நவஜீவன்** (**ஹிந்தி**) "**குவாமி ஆவாஸ்**' **பத்திரிகைகள் விரைவில் வெளியாகவுள்ளன.**அந்தப் பத்திரிகைகளின் ஆசிரியராக மூத்த பத்திரிகையாளர் நீலப் மிஸ்ராவை அசோசியேட்டட் ஜர்னல்ஸ் நிறுவனம் நியமித்தது.

- ஜவாஹர்லால் நேரு, கடந்த 1937-ஆம் ஆண்டு நிறுவிய **அசோசியேட்டட் ஜர்னல்ஸ் நிறுவனம்**, "நேஷனல் ஹெரால்டு', "நவஜீவன்', "குவாமி ஆவாஸ்' ஆகிய பத்திரிகைகளை வெளியிட்டு வந்தது. அந்த நிறுவனம் கடந்த 2008-ஆம் ஆண்டுக்குப் பிறகு மூடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

6. **ஒரு நாள் சிறை வாசத்தை அனுபவிக்க ரூ**.500 **கட்டணம் - புதுமையான சுற்றுலா அறிமுகம்** : "சிறைச்சாலை அனுபவத்தை உணர்வோம்' என்ற புதிய சுற்றுலாத் திட்டத்தின்படி, 220 ஆண்டுகள் பழைமையான **தெலங்கானா மாநிலம்**, **மேடக் மாவட்டத்திலுள்ள**, **சங்கரெட்டி மத்தியச் சிறைச்சாலையில்** சுற்றுலாப் பயணிகள் ஒரு நாள் முழுவதும் தங்கிச் செல்ல ரூ.500 கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

- கடந்த 2012-இல் அருங்காட்சியகமாக மாற்றம் செய்யப்பட்ட சங்கரெட்டி மத்தியச் சிறைச் சாலை ஹைதராபாதில் நிஜாம் ஆட்சியின் கீழ் தலைமை அமைச்சராக இருந்த முதலாவது சாலார் ஜங் என்பவரால், கடந்த 1796-ஆம் ஆண்டு, சங்கரெட்டியில் கட்டப்பட்டதாகும்.

7. **எதிரி சொத்து மசோதா** தொடர்பான அவசரச் சட்டம் மறு பிரகடனப்படுத்தப்பட்டதற்கு மத்திய அமைச்சரவை 31-08-2016 அன்று ஒப்புதல் அளித்தது.

8. **டாட்டாவின் நேனோ கார் தொழிற்சாலைக்காக மேற்கு வங்கத்தின் சிங்கூர் கிராமத்தில்**, **அம்மாநில அரசால் நிலம் கையகப்படுத்தப்பட்ட சட்டத்தை ரத்து செய்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.** மேற்கு வங்க மாநிலத்தின் சிங்கூர் கிராமத்தில் டாட்டாவின் நேனோ கார் தொழிற்சாலை அமைக்கும் பொருட்டு, பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன. இதை எதிர்த்து, "**ஜனநாயக உரிமைகள் பாதுகாப்பு கூட்டியக்கம்**' என்னும் அமைப்பு தொடந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் இந்த தீர்ப்பை அளித்துள்ளது.

9. **பிரேசில் அதிபர் தில்மா ரூசெஃபை பதவி நீக்கம்** செய்து, அந்நாட்டு நாடாளுமன்ற செனட் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

10. **பாகிஸ்தானைச் சேர்ந்த சகோதரிகள் மரியம் மசூத் மற்றும் ஏர்ரம் மசூத் ஆகியோர் போயிங்**-777 **விமானம் ஓட்டிய முதல் சகோதரிகள்** என்ற பெருமையை பெற்றுள்ளனர்.

**தி இந்து**

11. அகில இந்திய அளவில் முதியோர்கள் கொலை செய்யப்படுவதில் தமிழகம் 2 வது இடத்திலும், குழந்தைகளுக்கு எதிரான வன் கொடுமை குற்றங்களில் தமிழகம் 4 வது இடத்திலும் இருப்பதாக தேசிய குற்றப்பிரிவு புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

12. **புதிய மண்டலக் கலை பண்பாட்டு மையம் கோவையில்** ஏற்படுத்தப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

13. **அரசு பணிபுரியும் பெண்களுக்கு பேறுகால சலுகையாக வழங்கப்படும்** 6 **மாத கால மகப்பேறு விடுப்பு** 9 **மாத காலமாக உயர்த்தப்படுவதாக** சட்டப்பேரவையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

14. உலக பாலியல் நலன் விழிப்புணர்வு தினம் (World Sexual Health Day) - **செப்டம்பர்** 4

**தினமலர்**

15. கோவா சட்டசபையில் 01-01-2016 அன்று ஜிஎஸ்டி எனப்படும் சரக்கு மற்றும் சேவை வரி மசோதா தாக்கல் செய்யப்பட்டு, ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. **ஜிஎஸ்டி மசோதாவை நிறைவேற்றும்** 15**வது மாநிலம் கோவா என்பது குறிப்பிடத்தக்கது.**

16. **சட்டசபைக்கு சைக்கிளில் வந்த முதல்வர் , எம்.எல்.ஏக்கள் : ஹரியானா**வில், சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்தை பயன்படுத்த வலியுறுத்தி, முதல்வர் மனோகர்லால் கட்டார், மாநில அமைச்சர்கள் மற்றும் எம்.எல்.ஏ.,க்கள், சட்டசபைக்கு 31-08-2016 அன்று, சைக்கிளில் சென்றனர்.

**17.எகிப்து அதிபர் அப்தெல் பட்டாஹ் அல் சிசி மூன்று நாள் பயணமாக இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.**

- வர்த்தக உறவில் நட்பு நாடுகளின் வரிசையில் எகிப்து 6-வது இடம் பெற்றுள்ளது.
- இந்திய பொருட்கள் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படும் நாடுகளின் வரிசையில் எகிப்து 2-வது இடத்தை பிடித்துள்ளது.

18. **தேசிய ஜூடோவில் பழநி மாணவர் தங்கம்** : தேசிய கிராமப்புற விளையாட்டு ஆணையம் சார்பில், கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தில், தேசிய ஜூடோ போட்டிகள் நடந்தன. இதில், 66 கிலோ எடைப் பிரிவில், பழநியைச் சேர்ந்த கல்லூரி மாணவர் **ப.பிரதீப்குமார்**,20, முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

**தினத்தந்தி**

19. 2011 **மக்கள் தொகை கணக்கெடுப்பு படி மதவாரியாக கல்வி கற்றோர் விகிதம் - தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.**

- இதன்படி, இந்திய மத சமூகங்கள் மத்தியில் **ஜெயின் சமூகத்தை சேர்ந்தவர்கள் அதிக சதவீத்த்தில்,** 86 சதவீதத்திற்கு மேல் படித்தவர்களாக உள்ளனர். ஜெயின் சமூகத்தில் 7 வயது மற்றும் அதற்கு மேலே படிக்காதவர்கள் 13. 57 சதவீதம் உள்ளனர். இதே வயதில் படிக்காதவர்கள் இஸ்லாம் சமூகத்தில் 42.72 சதவீதம் உள்ளது.
- இந்து சமூகத்தில் 36.40 சதவீதமும், சீக்கிய சமூகத்தில் 32.49 சதவீதமும் புத்த சமூகத்தில் 28.17 சதவீதமும், கிறிஸ்டியன் சமூகத்தில் 25.66 சதவீதமும் படிக்காதவர்கள் உள்ளனர்.
- கல்வி கற்றவர்கள் பிரிவில் 7 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேலும் உள்ளவர்கள் இந்து சமூகத்தில் 63.60 சதவீதமும், இஸ்லாம் சமூகத்தில் 57.28 சதவீதமும் உள்ளனர்.கிறிஸ்டியன் சமூகத்தில் 74.34 சதவீதமும், புத்த மதத்தில் 71.83 சதவீதம் கலவி கற்றவர்களும் உள்ளனர்.ஜ்யின் சமூகத்தில் பட்ட படிப்பு மற்றும் அதர்கும் மேல் படித்தவர்களும் அதிகமாக உள்ளனர்.

20. **அந்நிய முதலீட்டு விதிகளில் முக்கிய மாற்றங்கள்** :

- பாதுகாப்பு துறையில் 100 சதவீத அன்னிய நேரடி முதலீடுக்கு மத்திய மந்திரிசபை ஒப்புதல் வழங்கியது. இதுவரை தானியங்கி முறையின்கீழ், கம்பெனி பங்குகளில் 49 சதவீத அன்னிய நேரடி முதலீடு அனுமதிக்கப்பட்டு வந்தது.
- மருந்து துறையில் தானியங்கி முறையின்கீழ் 100 சதவீத அன்னிய நேரடி முதலீடு அனுமதிக்கப்பட்டு வந்தது. இனி, இந்த துறையின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், பிரவுன்பீல்டு (நகர்ப்புறம்) மருந்து துறையில், 74 சதவீத அன்னிய நேரடி முதலீடு



www.tnpscportal.in

அனுமதிக்கப்படும். 74 சதவீதத்துக்கு அதிகமான அன்னிய நேரடி முதலீடுக்கு அரசின் அனுமதி பெற வேண்டும்.

- சிவில் விமான போக்குவரத்து துறையில் பயன்பாட்டில் உள்ள விமான நிலையங்களை நவீனமயமாக்கவும், உயர்ந்த தரத்தை பராமரிக்கவும் பிரவுன்பீல்டு (நகர்ப்புறம்) விமான நிலைய திட்டங்களில் தானியங்கி முறையின்கீழ் 100 சதவீத அன்னிய நேரடி முதலீடு அனுமதிக்கப்படுகிறது. திட்டமிட்ட விமான போக்குவரத்து சேவை, உள்நாட்டு திட்டமிட்ட பயணிகள் விமான நிறுவனம், பிராந்திய விமான போக்குவரத்து சேவை துறைகளில் 100 சதவீத அன்னிய நேரடி முதலீடு அனுமதிக்கப்படும். இதில் 49 சதவீதம் தானியங்கி முறையின் கீழும், 49 சதவீதத்துக்கு அதிகம் என்றால் அரசின் அனுமதியின் கீழும் அனுமதிக்கப்படும்.

21. **விமான விபத்தில் நேதாஜி உயிரிழந்தார் ஜப்பான் அரசின் விசாரணை அறிக்கை தகவல்** : நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் உயிரிழப்பு தொடர்பான ஜப்பானிய அரசின் அதிகாரப்பூர்வ அறிக்கையானது 01-09-2016 அன்று பொதுமக்கள் மத்தியில் வெளியிடப்பட்டு உள்ளது. விசாரணை அறிக்கையில் 1945-ம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 18-ந்தேதி தைவான் நாட்டில் தைபே விமானதளம் அருகே நடந்த விமான விபத்து ஒன்றில் உயிரிழந்துவிட்டார் என்று குறிப்பிடப்பட்டு உள்ளது.

Others

22. **பொது நிதி மேலாண்மை முறைமை** (Public Fund Management System (PFMS)) **எனும் மத்திய அரசின் திட்டங்களை நிர்வகிப்பதற்கான திட்டம் நாட்டிலேயே முதல்முறையாக ஜார்க்கண்ட் மாநிலத்தில் அமல்படுத்தப்பட்டுள்ளது**. இத்திட்டமானது மத்திய அரசின் திட்டக்கமிஷனால் 2008-2009 ஆம் ஆண்டுகளில் சோதனை முறையில் அமல்படுத்தப்பட்டு வந்தது.

23. “**தூய்மை இந்தியா திட்டத்திற்காக**” ஒரு **காமிக் நாவல் புத்தகத்தை** தயாரிப்பதற்காக மத்திய நகர்புற மேம்பாட்டு அமைச்சகம் பிரப்ல காமிக் புத்தக நிறுவனமான “அமர் சித்ரா கதா” (Amar Chitra Katha) வுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

- தூய்மை இந்தியா திட்டம் துவக்கப்பட்ட நாள் - அக்டோபர் 2, 2014

24. **மத்திய அரசின் “உஜ்ஜாலா”** (Unnat Jyoti by Affordable LEDs for all (UJALA)) **திட்டத்தின் மூலம் நாட்டிலேயே முதல் மாநிலமாக, குஜராத் இரண்டு கோடி எல்.இ.டி விளக்குகளை மானிய விலையில் வழங்கியுள்ளது.**

25. **சார்க் நாடுகளின் புள்ளியியல் அமைப்பின் எட்டாவது மாநாடு புது டில்லியில்** 29-08-2016 அன்று மத்திய புள்ளியியல் துறை அமைச்சர் **சதானந்தா கவுடா** அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

26. **NPCI - National Payments Corporation of India** (தலைமையிடம் - மும்பை)

27. BBPS - Bharat Bill Payment System

28. ஆகஸ்டு 2016 ல் பிரேசிலின் புதிய அதிபராக பொறுப்பேற்றவர் - **மைக்கேல் தீமர்** (Michel Temer)

29. ராமன் மகசேசே விருது 2016 பெற்ற இரு இந்தியர்கள் - **தோடர் மாதபூசி கிருஷ்ணா** (Thodur Madabusi Krishna) **மற்றும் பேஷ்வாடா வில்சன்** ( Bezwada Wilson)

30. புது தில்லியில் அமைந்துள்ள சுற்றுச்சூழல் பல்கலைக்கழகமான TERI பல்கலைக்கழகத்தின் வேந்தராக மத்திய அரசின் முன்னாள் நிதி செயலர் **அசோக் சாவ்லா** (Ashok Chawla) நியமிக்கப்பட்டுள்ளார்.

31. உலக வங்கியினால் வெளியிடப்பட்டிருக்கும் "**தளவாடங்கள் செயல்திறன் பட்டியல்** 2016" இல் **இந்தியா** 35 வது இடத்தைப்பெற்றுள்ளது. இந்த அறிக்கை உலகவங்கியினால் Logistics Performance Index (LPI) எனும் பெயரில் இரு ஆண்டுகளுக்கு இருமுறை வெளியிடப்படுகிறது.

32. "**பிரகாம்பானா** 2016 " (Prakampana-2016) - சூறாவழி காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய அவசரகால நடவடிக்கைகளைப்பற்றி, இந்திய கடற்படை மற்றும் இதர மாநில மற்றும் தேசிய பாதுகாப்பு நிறுவங்கள் இணைந்து ஆகஸ்டு 30 அன்று விஷாகப்பட்டிணத்தில் நடத்திய கூட்டு இராணுவ பயிற்சி.

33. **இந்தியாவின் முதல் ஆற்றுத் தீவு மாவட்டம்** (river island district) - அஸ்ஸாம் மாநிலத்திலுள்ள "**மஜீலி**" (Majuli)

34. "**சகாயாதா** 2016" ("SAHAYATA-2016") - செப்டம்பர் 2016 ல் குஜராத்தில் "பூஜ்" (Bhuj) விமானப்படைத்தளத்தில் நடைபெறவுள்ள இந்திய விமானப்படையின் பேரிடர் மேலாண்மையை எதிர்கொள்வதற்கான வருடாந்திர கூட்டு இராணுவப் பயிற்சியாகும்.

35. "The Assassination of Rajiv Gandhi: An Inside Job?" எனும் புத்தகத்தின் ஆசிரியர் - நீனா கோபால் (Neena Gopal)

36. **மத்திய உள்நாட்டு நீர்ப் போக்குவரத்து நிறுவனத்தை** (Central Inland Water Transport Corporation Limited (CIWTC)) **கலைப்பதற்காக** கருத்துருவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

www.tnpscportal.in